Chenkaantal
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

Volume - 2, Special Issue - 2, January 2023 E-ISSN: 2583-0481

# Elucidation Techniques in the Canto Andhimalai Sirappu

**Dr. P. Siva Selvan**, Assistant Professor of Tamil, Bishop Heber College, Tiruchirappalli, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0001-7080-8089**
**DOI: 10.5281/zenodo.7584000**

## Abstract

*There are two types of research methods in literary studies namely content and geometry. This review is structured in part towards geometry. Narratology (Rhetoric) does not examine the content of the work, but how the content of the work is presented in the elements. In Silapathikaram, Anthimalai sirappu sey Kathai examines how the methods of reciting in the elucidation process. Since, it is beyond the scope of the article to examine all the Narratological (Rhetorical) elements, 1. time-based Narratology (Rhetorical) method, 2. character-based Narratology (Rhetorical) method, which is suitable for this study, has been examined using only two strategies. It can be assumed that through the results analyzed in this review article, the creator's method of producing work and the techniques used by the creator to express the content to society have been taken to the world of literature.*

**Keywords:** Elucidation, Techniques, Andhimalai Sirappu, Canto.

**References**

[1] Sellappanar, S.(Pa.,Aa.,). *Silappathikaram Mulamum Uraium*. Bharathi Nilaiyam, Chennai – 17, 2016.

[2] Panjangam, Ka. *Naveena Kavithaiyil Eduthuraippiyal*. Kaviya Pathipagam, Chennai – 600024, 2003.

[3] http://hdl.handle.net/10603/5879 Accessed 25 June 2022.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

# அந்திமாலைச் சிறப்புச்செய் காதையில் எடுத்துரைப்பியல் முறைகள்

**முனைவர் ப. சிவசெல்வன்,** உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை,
பிஷப் ஹீபர் கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0001-7080-8089
DOI: 10.5281/zenodo.7584000

**ஆய்வுச்சுருக்கம்**

*இலக்கிய ஆய்வுகளில் உள்ளடக்கம், வடிவவியல் என இருவகை ஆய்வுமுறைகள் உள்ளன. இவ்வாய்வுக்கட்டுரை வடிவவியல் நோக்கில் ஒரு பகுதியாக அமைக்கப்பட்டுள்ளது. எடுத்துரைப்பியல் எனபது பனுவலின் உள்ளடக்கதை ஆராயாது, பனுவலின் உள்ளடக்கம் எத்தகைய முறைகளில், கூறுகளில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன என்பதை ஆராய்கின்றது. சிலப்பதிகாரத்தில் அந்திமாலைச் சிறப்புச் செய் காதையில் எடுத்துரைக்கும் முறைகள் எவ்வாறு அமைந்துள்ளன என்பதை ஆராய்கின்றது. எடுத்துரைப்பியல் கூறுகள் முழுவதையும் கொண்டு ஆராய்வது கட்டுரையின் எல்லை நீளும் என்பதால், இக்காதைக்குப் பொருந்துகின்ற 1. காலம் சார்ந்த எடுத்துரைப்பியல் முறை, 2. பண்புநலன் சார்ந்த எடுத்துரைப்பியல் முறை ஆகிய இரண்டு உத்தி முறைகளை மட்டும் பொருத்தி ஆராயப்பட்டுள்ளன. இவ்வாய்வுக்கட்டுரையில் ஆராய்ந்து கூறப்பட்டுள்ள முடிவுகளின் மூலமாக படைப்பாளன் பனுவலை உற்பத்தி செய்யும் முறையையும், உள்ளடக்கத்தை நேர்த்தியாகச் சமூகத்திற்கு எடுத்துக் கூற என்னென்ன நுட்பங்களை கையாளுகிறார் என்ற படைப்பாளரின் அறிவுத்திறமும் இலக்கிய உலகிற்கு எடுத்தியம்பப்பட்டுள்ளன, எனக் கருதலாம்.*

**குறிப்புச் சொற்கள்:** அந்திமாலைச் சிறப்புச்செய் காதை, எடுத்துரைப்பியல் முறைகள்.

**முன்னுரை**

காலந்தோறும் சிலப்பதிகாரம் பல்வகையான ஆய்வு நோக்குகளில் ஆய்வுசெய்யப்பட்டுள்ளது, பல்வேறு ஆய்வுப் நோக்குகளில் ஆய்வுசெய்யக் களமாக சிலப்பதிகாரம் அமைந்துள்ளது. சிலப்பதிகாரம் நேர்த்தியான காப்பியக் கதையோட்டத்துடன் அமைக்கப்பட்டுள்ளது. கதைப் பாத்திரங்கள் தொடர் ஒழுங்கமைப்புடன் உருவாக்கப்பட்டுள்ளனர். இக்காப்பியக் கதையை எடுத்துரைப்பதிலும் சிதைவு இல்லாத் தன்மையையும், ஒழுங்கமைப்பையும் எடுடுத்துரைத்துள்ளார். இவற்றை எல்லாவற்றையும் விட இளங்கோவடிகள் கதைத் தலைவன் பெறும் இடத்தைக் காட்டிலும் உயர்வான இடத்தில் காப்பியத்தலைவியை நிறுத்தியிருக்கின்றார். தண்டியலங்காரம் வகுத்த இலக்கண முறையிலிருந்து விலகி, மாற்றாக ஒரு புதிய இலக்கண விதிமுறையை வகுத்துக் கொண்ட காப்பியம். காப்பியக் கதைக்குத் தேவையான அம்சங்களையும், கதைக்குச் சிதைவில்லாமல் கிளைக் கதைகளையும்

கொண்டுள்ளன. சிலப்பதிகாரத்தில் பல பகுதிகளில் இளங்கோவடிகளின் அறிவுக் கூர்மையையும், அவரின் எடுத்துரைப்புச் சிறப்பும் விளங்குவதைக் காணலாம். சான்றாக,

- பெண்மையை(கண்ணகியை) உயர்வுபடுத்தியது
- வணிகக்குடிமகனை காப்பியத் தலைவனாக அமைத்தது.
- கனிகை குலப் பெண்ணை(மாதவியை) குடும்பப் பெண்ணாகப் படைத்தது.
- மன்னன் நீதி தவறினால் ஏற்படும் விளைவுகளை உலகிற்கு அறிவித்தது.
- சமண சமயக் துறவிகளை அறங் கூற வைத்தது.
- நாளங்காடி அல்லங்காடி செயல்படும் விதம், பொருள் தயாரிக்கும் வினைஞர்களின் சிறப்புகள் ஆகியவற்றை எடுத்துக் கூறியது. என பல சிறப்புகளை முன்வைக்கலாம்.

**ஆய்வு நோக்கம்**

புதிய கருத்துக்களை எடுத்துரைப்பதில் சிறப்பிடம் பெறும் இளங்கோவடிகளின் சிலப்பதிகாரக் காப்பியத்தில் இடம் பெற்றுள்ள அந்திமாலை சிறப்புச் செய் காதையில் – எடுத்துரைப்பியல் முறையை ஆய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**ஆய்வு அணுகுமுறை**

எடுத்துரைப்பியல் கோட்பாடு தமிழில் அறிமுகம் ஆவதற்கு முன்பே கதை சொல்லும் முறை குறித்து காப்பிய இலக்கணம் வகுத்தோரும், இலக்கண வல்லோரும் கூறியிருக்கின்றனர். பனுவலில் படைப்பாளரின் நுட்பத்தை அறிந்து அவற்றை எடுத்துக் கூறும் அளவிலே இக்கோட்பாட்டை ஆய்வு அணுகுமுறையாக எடுத்துக்கொள்ளப்பட்டது. அந்திமாலைச் சிறப்புச்செய் காதையில் எடுத்துரைப்பியல் முறைகள் என்ற இக்கட்டுரைக்குள் செல்வதற்கு முன்பாக சிலம்பில் அந்திமாலைச் சிறப்புச் செய் காதையின் சிறப்பு குறித்தும், எடுத்துரைப்பியல் என்றால் என்ன என்பதைக் குறித்தும் சுருக்கமாகக் காண்போம்.

**அந்திமாலைச் சிறப்புச் செய் காதை – சிறப்புகள்**

சிலப்பதிகாரப் புகார் காண்டத்தில் நான்காம் காதையாக அமைந்துள்ள அந்திமலைச் சிறப்புச் செய்காதையில், 1. மாலைப்பொழுதின் வரவு, 2. வைகறை வரையில் காமன் இருத்தல், என்ற பகுதிகள் ஒருபுறம் இயல்பாக வரும் நேர வர்ணிப்புகள். இது இயற்கைச் சூழலை வர்ணிப்பது போல் அமைந்திருந்தாலும் – அதனூடாக,

1. நிலா முற்றத்தில் கோவலனும் மாதவியும் களித்திருத்தல்,
2. காதலரைக் கூடிய மகளிரின் களி மகிழ்வு,
3. கணவனைப் பிரிந்து வாழும் கண்ணகியின் துயர நிலை

எனக் காப்பியக் கதைமாந்தர்களாகிய கோவலன், மாதவி, கண்ணகி, ஏனையோர் - ஆகியோரின் உள்ளத்து உணர்வுகளை விவரிப்பதாக அமைந்துள்ளன. இயற்கைச் சூழல் கதைமாந்தரின் உளவியல் இவை இரண்டையும் ஒரு சேர வாசகர் உணர்ந்து கொள்ளுவது போல் இருந்தாலும், எடுத்துரைக்கும் விதம், இதில் எடுத்துரைக்கப்பட்டது இயற்கை வர்ணிப்பா? – மாந்தரின் உளவியலா? எனப் பிரித்தறிய முடியா வகையில் இளங்கோவடிகள் இரண்டையும் ஒன்றாக

இணைத்து இயற்றியுள்ளார். இது அடிகளின் நுட்பமான எடுத்துரைப்பியல் சிறப்பினை உணரச் செய்கின்றது.

**எடுத்துரைப்பியல் – விளக்கம்.**

எடுத்துரைப்பியல் என்ற சொல் குறித்து த.சரவணன்,

> **எடுத்துரைப்பியல் என்னும் சொல் 'நேரட்டாலஜி' (Narratology) என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படுகிறது. பிரான்சு நாட்டைச் சோந்த தொடொரோவ் (Todorov) என்பவர் 1969 – ஆம் ஆண்டு இந்தச் சொல்லைக் கையாண்டார்.** (2010:10)

என்று எடுத்துரைப்பியல் நோக்கில் *பாரதியார் கதைகள்* என்ற அவரது ஆய்வேட்டில் குறிப்பிடுகின்றார்.

பேரா.க.பஞ்சாங்கம், நவீனக்கவிதையியல்: எடுத்துரைப்பியல் என்ற நூலில்,

> **எடுத்துரைப்பு என்ற இந்தச் சொல் மூலம் இங்கே சுட்ட முயல்வது வாழ்வின் தொடர்ந்து வரும் புனைவுமிகு நிகழ்வுகளை எவ்வாறு எடுத்துரைப்பது என்பது தான் 'எடுத்துரைப்பு'என்கிற இந்தச்சொல் சொல்பவரிடம் இருந்து கேட்பவருக்கு அல்லது எழுதுபவரிடமிருந்து வாசிப்பவருக்கு ஒரு செய்தியை எடுத்துச் செல்கின்ற ஒரு வகையான தகவைல் தொடர்பு முறையியலைக் குறிக்கின்றது. (2003:4)**

என்கிறார்.

**எடுத்துரைப்பின் அடிப்படை அலகுகள்.**

ஒன்றை எடுத்துரைப்பதற்கு அடிப்படையாக மூன்று அலகுகள் தேவை. அவை,

- நிகழ்ச்சிகள்
- மொழி அல்லது நிகழ்ச்சிகளுக்கான வார்த்தைக் குறியிடுகள்
- எடுத்துச் சொல்லும் அல்லது எழுதும் செயல்பாடு

இவை புனைகதை எடுத்துரைப்பில் பின்வருமாறு மறுபெரிட்டு அழைக்கப்படுகின்றன என்று க. பஞ்சாங்கம் குறிப்பிடுகின்றார். (2003:5-6) 1. கதை (Story) 2. பனுவல் (Text) 3. எடுத்துரைப்பு (Narration).

**எடுத்துரைப்பின் உட்பிரிவுகள்**

புனைவாக மாற்றம் பெற்ற எடுத்துரைப்பின் உட்பிரிவுகளாகப் பின்வருபவை விளங்குகின்றன. அவை. 1. நிகழ்ச்சி (Event), 2. கதைப்பின்னல் (Plot), 3. கதை மாந்தர் (Character), 4. பின்புல அமைப்பு (Setting), 5. நோக்கு நிலை (Focalization). (2003:6) மேற்குறிப்பிட்ட எடுத்துரைப்பு - விளக்கமும், அதன் அலகுகளும், உட்பிரிவுகளும் – விளங்கிக் கொள்வதற்கான தொடக்கமே, எடுத்துரைப்புப் பற்றி முழுமையாக கூறப்புகுந்தால் இவ்வாய்வுக்கட்டுரை அதன் எல்லைக்குள் அடங்காது நீண்டு போகும். எனவே கட்டுரையின் எல்லை கருதி எடுத்துரைப்பின் அலகுகளில், உட்பிரிவுகளாக அமைந்துள்ள காலம்சார்ந்த எடுத்துரைப்பு முறை, பண்புநலன் சார்ந்த எடுத்துரைப்பு முறைகளில் ஒருசிலவற்றை

அந்திமாலைச் சிறப்புச் செய் காதையில் ஆராயப்பட்டுள்ளது. முடிவில் இளங்கோவடிகளின் நுட்பமான எடுத்துரைப்பியல் முறைகள் யாவை என்பதை தொகுத்துரைக்கப்பட்டுள்ளன.

**காலம் சார்ந்த எடுத்துரைப்பு**

காலம் சார்ந்த எடுத்துரைப்பியல்எத்தனை வகைகளாக பகுக்கப்பட்டுள்ளன என்பதை பேரா.பஞ்சாங்கம் கீழ்க்கண்டவாறு கூறுகிறார்.

> **எடுத்துரைப்பியலில் காலம் மூன்று வகையான முறையில் பார்க்கப்படுகின்றது.1. ஒழுங்கு 2. நிகழ்ச்சி நடக்கும் கால அளவு 3. தொடர் நிகழ்வு. 8.1. ஒழுங்கு என்பதை 1. பின்னோக்கு 2. முன்னோக்கு எனறு இருவகையாகப் பெயரிடுகின்றார் ஜெனேத். (2003: 67)**

**பின்னோக்கு எடுத்துரைப்பு (Analepsis)**

பின்நோக்கு எடுத்துரைப்பு என்பது,

> **ஒரு பனுவலில் நடந்த நிகழ்ச்சிகள் சொல்லப்பட்ட பிறகு அந்தப் புள்ளியில் நின்று கொண்டு கதை நிகழ்ச்சியை எடுத்துரைப்பதாகும். இதனை இறந்த கால எடுத்துரைப்பு என்று கூறுவர். இதனை முதல் எடுத்துரைப்பு, புறநிலைப் பின்நோக்கு என்றும் இதற்குப் பெயரிடுகிறார் ஜெனேத். (2003: 67)**

**முன்னோக்கு எடுத்துரைப்பு (Prolepsis)**

முன்னோக்கு எடுத்துரைப்பு முறையை பற்றிக் கூறும்போது,

> **நடந்த நிகழ்ச்சியைச் சொல்வதற்கு முன்னால் அந்தப் புள்ளியில் நின்று கொண்டு கதை - நிகழ்ச்சியை எடுத்துரைப்பதாகும். இங்கே எடுத்துரைப்பு என்பது எதிர்காலம் பற்றிய பயணமாக அமைகிறது. ( 2003: 67)**

சிலப்பதிகாரத்தில் அந்திமாலைச் சிறப்புச் செய்காதையைப் பொறுத்தவரையில் கோவலன் மாதவியை ஏற்றுக்கொண்டு இணைந்த பின் மனையறை நிகழ்வுகளைக் கூறுவதாகவும், அதைப் போன்று கோவலனைப் பிரிந்ததால் கண்ணகி தனிமைப்பட்டவலாக மாறி நிற்கதியாக நிற்கின்றாள். என்ற புள்ளியில் இருந்து இக்காதை தொடங்குகின்றது. ஆகவே இங்கு முன்னோக்கு எடுத்துரைப்பு முறை பயன்படுத்தப்பட்டுள்ளது.

> **மிகவும் அனுபவப்பட்ட வாசகர் கதை சொல்லியானவர் பின்னால் பயன்படுத்துவதற்கு முன்னாலே வைக்கின்ற தகவலை மிக எளிதாக அடையாளங் கண்டு கொள்வார். அதுவும் மரபார்ந்த இலக்கியத்தில் மிக எளிதாகப் புரிந்துகொள்வார்.” என்று கூறுவார் பேரா.க.பஞ்சாங்கம். (2003: 69)**

சிலப்பத்திகாரத்தில் இளங்கோவடிகள் கோவலன் கண்ணகியை விட்டுப் பரிவதை நுட்பான முறையில் காப்பியத்தின் தொடக்கத்திலே கூறிவிடுகின்றார். இதனை,

> **காதலற் பிரியாமல் கவவுக்கை ஞெகிழாமல்**
> **தீதறு கெனஏத்திச் சின்மலர் கொடு தூவி (பு.கா.,மங்.வாழ்.பாடல்., 61-62)**

என்ற வரிகளின் வாயிலாக உணர்த்துகொள்ளலாம். கோவலனும் மாதவியும் இணைந்து வாழ்ந்த பின், கோவலன் முடிவில் அனைத்துப் பொருட்களையும் இழக்கின்றான். மீண்டும் கண்ணகியுடன் வாழத் திரும்புவதும் அதனால் உயிர்விடுதாகக் காப்பியக் கதையின் பின் நிகழ்வை ஊகித்துக் கொள்ளும் வகையில் அடிகள் எடுத்துரைக்கின்றார்.

**நிகழ்ச்சி நடக்கும் கால அளவு**

நிகழ்ச்சி நடக்கும் கால அளவு என்பதை 1.வேகம் மிகுதி (Acceleration) 2.வேகம் குறைவு (Deceleration) என்று இருவகைப்படுகின்றனர். மரபார்ந்த இலக்கியங்களில் சுருக்கம் (Summary) காட்சி (Scene) என்று இருவகையாகக் கூறுகின்றனர். வேகம் மிகுதி வேகக் குறைவு பற்றி விளக்கும் போது,

> **பனுவலினுடைய சிறு சிறு துண்டுப்பகுதிகள், கதையினுடைய நீண்ட காலத்திற்காக ஒருமுகப்படுத்தப் படும்போது அந்தப் பனுவலுக்கு வேகமிகுதியின் விளைவுகள் உருவாகிவிடுகின்றன. பனுவலினுடைய நீண்ட பகுதிகள், மிகக் குறுகிய காலத்தையுடைய கதைக்காக ஒருமுகப்படுத்தப்படும்போது வேகக்குறைவு விளைவு உருவாகிவிடுகின்றன. (2003:72)**

என்கிறார் பேரா. பஞ்சாங்கம்.

**வேகமிகுதி எடுத்துரைப்பு முறை**

சிலப்பதிகாரக் காப்பியம் மிக நீண்ட கதையமைப்பையுடையது. இக்கதையை ஒரே மூச்சில் பனுவலில் எடுத்துரைத்திட முடியாது. ஆகவே மூன்று காண்டங்கள் முப்பது காதைகள் என்ற முறையில் சிறு சிறு துண்டுகளாகப் பிரித்து ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. இவ்வாறு சிறு சிறு துண்டுகளாக பனுவலை மாற்றினாலும் அதனுள்ளாக நிகழ்ச்சிகளின் தொடர் ஒழுங்கும், கால அளவும் முறையாகப் பின்பற்றப்பட்டுள்ளது. பனுவலில் நிகழ்ச்சித் தொடர்பும், கால அளவும் முறையாக எடுத்துரைக்கப்பட்டுள்ளதைக் கொண்டு இளங்கோவடிகளின் நுட்பத்தைக் காட்டுகின்றது.

**வேகம் குறைவு எடுத்துரைப்பு முறை**

வேகம் குறைவு எடுத்துரைப்பு முறையை – மரபார்ந்த இலக்கியங்களில் காட்சி எனக் குறிப்பிடுவர். காட்சி என்பது துண்டு துண்டுகளாக அமைக்கப்பட்டிருக்கும் பகுதிகளை விளக்கியுரைப்பதாகும். இங்கு ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட அந்திமாலைச் சிறப்புச் செய் காதை என்பது, சிலப்பதிகாரக் கதையின் சிறு துண்டாகும் இதில் ஒவ்வொரு பகுதியையும் கால ஒழுங்கின்படியும், நிகழ்ச்சி ஒழுங்கின் படியும் எடுத்துரைப்பதாகும். மாலை நேர பிரிவு துயரம் தருவதாக இருக்கின்றது, என்பதை வாசகர் யாவரும் எளிதில் உணர்ந்து கொள்ளுமாறு காட்சிப்படுத்தி எடுத்துரைக்கின்றார்.

> **காதலர்ப் பிரிந்த மாதர் நோதக,**
> **ஊது உலைக் குருகின் உயிர்த்தனர் ஒடுங்கி,**
> **வேனில் - பள்ளி மேவாது கழிந்து (அ.மா.சி.கா. 60-63)**

**தொடர் நிகழ்வு**

தொடர் நிகழ்வு என்பது,

**வந்ததே திரும்பத் திரும்ப வருவதோடு தொடர்புடையது. ஒவ்வொரு நிகழ்வின் போதும் நிகழ்கின்ற புதிய தனிப்பண்புகளை ஒதிக்கி வைத்துவிட்டு பொதுவான கூறுகளைத் தக்க வைத்துக் கொள்கின்ற மனித அமைப்பின் அடிப்படை வேலையாகும். (2003: 74)**

அந்திமாலைச் சிறப்புச் செய் காதையில் மாலை நேர வருகை முதன்மை பெறுகின்றது. இம்மாலை நேர நிகழ்வு தொடர் நிகழ்வாக வடிவமைக்கப்படுகின்றது. இதனை அடிகளார் நுட்பமான எடுத்துரைப்பு முறையில் வேறு வேறு நிகழ்வுகளை ஒப்பிட்டுக்காட்டுகின்றார். இதன் வாயிலாக ஒவ்வொன்றின் தனிப்பண்புகள் வெளிப்படுவதைக் காணலாம். மாலை வருவதால் பூமிப் பெண் புலம்புதல், மாலை நேரத்தை நாடுபிடுக்கும் அரசனோடு ஒப்பிடப்பிடுதல், மாலை நேரம் - கூடிய காதலருக்கு இன்பத்தைத் தருதல், பிரிந்தோருக்கு துன்பமாக மாறுவது, கண்ணகிக்குத் துன்பம் தருவது - என ஒரு நிகழ்வு தொடர் நிகழ்வாக வடிவமைக்கப்பட்டு ஒவ்வொன்றும் தனிப்பண்புடையதாக அமைவதைக் காணலாம்.

மாலை வருவதால் பூமிப் பெண் புலம்புவது,

**திங்கள் அம் செல்வன் யாண்டு உளன்கொல்?' என,**
**திசை முகம் பசந்து, செம் மலர்க் கண்கள்**
**முழு நீர் வார, முழு மெயும் பனித்து,**
**திரை நீர் ஆடை இரு நில மடந்தை (அ.மா.சி.கா., 4-7)**

இவற்றைப் போலவே மற்ற தலைப்புகளில் உள்ளவற்றையும் தனித்தனியே எடுத்துரைத்துகின்றார் அடிகளார்.

**பண்பு நலன் சார்ந்த எடுத்துரைப்பு**

பண்பு நலனை எடுத்துரைத்துரைத்தலில் 1.நேரடியான் பண்பு விளக்கம், 2.மறைமுகமான பண்பு விளக்கம் என்று இருவகைப்படுத்துகின்றனர். இவற்றில் மறைமுகமாக ஒருவரது பண்புநலனை விளக்குவதற்கு அவரது செயல் முதன்மையாக எடுத்துக்கொள்ளப்படுகிறது. ஒரு பனுவலில் செயல் மூலம் கதைமாந்தரின் பண்பு நலனை எடுத்துரைத்துரைத்தல் முக்கியத்துவம் வாய்த்தாகக் கொள்ளலாம்.

**செயல் மூலம் எடுத்துரைத்தல்**

கதை மாந்தரால் ஒரு செயலைச் செய்ய முடியும் ஆனால் செய்யாது விட்டு விடுதல் அந்திமாலைச் சிறப்பு செய் காதையில் கோவலன் மாதவியுடன் வாழத் தொடங்கினான் என்ற செய்தி கேட்டோ, கேட்காமலோ, தன் இருக்கும் இருப்பிடம் சேராத கணவனை எண்ணி, இதுவரை இருந்த நிலையிலிருந்து மாறி வேறு வகையான செயல்களுடன் தன்னை வெளிப்படுத்திக் கொண்டாள் என்பதை கீழ்க்கண்ட வரிகளில் அறியலாம்.

**அம் செஞ் சீறடி அணி சிலம்பு ஒழிய,**
**மென் துகில் அல்குல் மேகலை நீங்க,**

**கொங்கை முன்றில் குங்குமம் எழுதாள்,**

**மங்கல அணியின் பிறிது அணி மகிழாள், (அ.மா.சி.கா., 47-50)**

**வெளிப்புறத்தோற்றம் சார்ந்த எடுத்துரைத்தல்**

ஒருவருடைய உடலமைப்பிலிருந்து ஒருவருடைய குணத்தை அறியும் இக்கோட்பாடு ஒருவித அறிவியல் கோட்பாட்டுத் தகுதியைப் பெற்றது . இவ்விடத்தில் கோவலன் தன்னை விட்டுப்பிரிந்தான் என்று அறிந்ததும் அன்று முதல் அலங்கரிப்பு செய்வதை நிறுத்தி விடுகின்றாள் கண்ணகி. இதனை,

**செங் கயல் நெடுங் கண் அஞ்சனம் மறப்ப,**

**பவள வாள் நுதல் திலகம் இழப்ப,**

**தவள வாள் நகை கோவலன் இழப்ப,**

**மை இருங் கூந்தல் நெய் அணி மறப்ப,**

**கையறு நெஞ்சத்துக் கண்ணகி அன்றியும் (அ.மா.சி.கா., 53-57)**

என்ற வரிகள் உணர்த்துகின்றது.

**ஒத்திசைவான நிலக்காட்சி எடுத்துரைப்பியல்**

குறிப்பிட்ட சில இயற்கை நிலக்காட்சிக்கும் பனுவலில் கதைமாந்தரின் பண்புக் கூறுகளுக்கு ஒத்திசைந்து போவதை ஒத்திசைவான நிலக்காட்சி எடுத்துரைப்பியல் முறை எனக் கூறுவர்.

**அரைசு கெடுத்து, அலம்வரும் அல்லல்காலை-**

**கறை கெழு குடிகள் கை தலை வைப்ப,**

**அறைபோகு குடிகளொடு ஒரு திறம் பற்றி,**

**வலம்படு தானை மன்னர் இல்வழி,**

**புலம்பட இறுத்த விருந்தின் மன்னரின், (அ.மா.சி.கா., 8-12)**

மாலை நேரம், கொஞ்ச நேரம் பூமிப் பரப்பை ஆட்சி செய்து விட்டுச் சென்று விடும். அது போலவே கோவலனுக்கு மாதவியின் மீது உள்ள காதல் சிறிது காலத்தில் தீர்ந்து போய்விடும் என்பதை மாலை நேரத்தோடு ஒப்பிட்டு எடுத்துரைக்கின்றார் அடிகள். எடுத்துரைப்பியல் (Narratology) என்பதை, கதை சொல்லுதல் எனப் பதம் கொள்வார் பேரா.க.பூரணச்சந்திரன். எடுத்துரைப்பியலை இளங்கோவடிகள் அந்தி மாலைச் சிறப்புச் செய்காதையில் எவ்வளவு நுட்பமான முறையில் கையாணட்டுள்ளார் என்பதை கட்டுரையில் கண்டோம்.

மாலைப்பொழுது என்பது ஒவ்வொரு நாளும் இயல்பாக வந்து போகக் கூடியது. அம்மாலை நேரத்தில் நடக்கின்ற நிகழ்வுகளைக் கதையின் தொடர் நிகழ்வுக்குச் சிதைவில்லாமல் நுட்பமான முறையில் எடுத்துரைக்கின்றார். அதனைக் காலம் சார்ந்த எடுத்துரைப்பியல் முறையிலும். காப்பியத்தில் இடம் பெறும் ஒவ்வொரு கதைமாந்தரின் பண்பு நலன்களை எடுத்துரைக்கும் விதத்திற்கு பண்பு நலன் சார்ந்த எடுத்துரைப்பு முறையிலும் ஆராய்ந்து எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

## குறிப்புகள்

[1] செல்லப்பனார், சு. (பதி). *சிலப்பதிகாரம் மூலமும் உரையும்.* பாரதி நிலையம், சென்னை-17, 2016.

[2] பஞ்சாங்கம், க. *நவீனக் கவிதையியல்: எடுத்துரைப்பியல்.* காவ்யா, சென்னை – 600024, 2003.

[3] http://hdl.handle.net/10603/5879 25 ஜூன் 2022 அன்று அணுகப்பட்டது.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.